தி இந்து 22/04/14

# ஸ்ரீசாய்ராம் தொழில்நுட்ப பொறியியல் கல்லூரி 3-வது பட்டமளிப்பு விழா

■ சென்னை:

மேற்கு தாம்பரம் ஸ்ரீசாய்ராம் தொழில்நுட்ப பொறியியல் கல்லூரியில் 3-வது பட்டமளிப்பு விழா நடந்தது.

தேசிய மனித உரிமை ஆணைய உறுப்பினர் நீதியரசர் முருகேசன் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு பட்டங்களை வழங்கினார். "பட்டம் பெற்ற அனைவரும் வாழ்க்கையில் ஒழுக்கத்துடனும் மனிதநேயத்துடனும் இருக்க வேண்டும்" என்று பட்டமளிப்பு உரையில் அவர் குறிப்பிட்டார்.

பட்டம் பெற்ற மாணவ, மாணவிகளை கல்லூரி தலைவர் அரிமா லியோமுத்து வாழ்த்திப் பேசும்போது, "மாணவர்கள் அனைவரும் சிறந்த பண்புகளுடனும் கடமை உணர்வுடனும் பணியாற்ற வேண்டும்" என்றார். மாணவர்கள் தொழில் முனைவோராக மாற வேண்டியதன் அவசியம் குறித்து கல்லூரியின் முதன்மை செயல் அதிகாரி சாய் பிரகாஷ் லியோமுத்து பேசினார். பல்கலைக்கழக ரேங்க் பெற்ற மாணவ, மாணவிகளை டிரஸ்டி ஷர்மிளா ராஜா வாழ்த்தினார். முன்னதாக கல்லூரி முதல்வர் பழனிக்குமார் அனைவரையும் வரவேற்று, ஆண்டறிக்கை வாசித்தார். மேலாண்மைக் கல்வி இயக்குநர் மாறன் நன்றியுரை ஆற்றினார்.




மாணவர்களுக்கு பட்டங்களை நீதியரசர் முருகேசன் வழங்கினார். கல்லூரி தலைவர் லியோமுத்து, முதன்மை செயல் அதிகாரி சாய் பிரகாஷ் லியோமுத்து, டிரஸ்டி ஷர்மிளா ராஜா உள்பட பலர் பங்கேற்றனர்.

Anna Salai, Chennai-600002 on behalf of KASTURI & SONS LTD., and Printed by S. Padmanabhan at Plot B-6 & B-7, CMDA Industrial Complex, Maraimalai Nagar, Chengleput Taluk, Kancheepuram Dist., Pin: 603209. Editor: K. Asokan (Editor responsible for se